தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

திருவ. 2018 நளி (29-11-1987) நவ-87 85 காசுகள் (இதழ் எண்: 95)

காந்தி - பெயர் இணைப்புக்குப் பொருத்தமானவர் அல்லர் இராசீவ்!

காந்தியக் கொள்கையில் நமக்குப் பல கருத்து வேறுபாடுகள் இருப்பினும் காந்தியாரின் மாந்த உரிமை மீட்புக் கொள்கை என்ற அளவில் அவரை நாம் மதிக்கவே செய்கின்றோம். இந்தக் காரணத்தாலேயே **'காந்தி'** என்ற பெயருக்கு ஒரு புனிதத்தன்மை ஏற்பட்டு உலகளவிலும் பரவியுள்ளது. இந்தியாவில் அனைத்துப் பிரிவினராலும் அப்பெயர் மதிக்கப் பெற்றுவந்தது. அவருக்குப் பின் அவரின் போராட்ட உடன் தோன்றல்களாக இருந்தவர்களில் சிலர் உண்மையாகவும், சிலர், புரட்டர்களாகவும் அதிகார வகுப்பினராக அமர்ந்து கொண்டு முடிவில் இந்தியாவைத் தங்கள் வல்லாளுமைக்குக் கீழ்க் கொண்டு வந்தனர்.

அவ்வாறு போராட்ட உடன் தோன்றலாகவிருந்து இந்தியாவை ஆளுமை செய்த நேருவின் மகள் இந்திரா பார்சி இனத்தைச் சேர்ந்த பெரோசு காந்தி என்பவரை மணந்தார். அதன்வழி **'காந்தி'** என்ற அடைபெயரை இணைத்துக் கொண்டு இந்திரா, **இந்திராகாந்தி**யானார். ஏற்கனவே **'காந்தி'** என்ற பெயருக்கு இருந்த மதிப்பை, தமக்காக்கிக் கொண்ட அவர் அப்பெயருக்குரிய பெருந்தன்மையின்றியும், அதற்கு நேர்மாறாகவும் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளைப் படிப்படியாகப் பறித்துக் கொண்டு அனைத்ததிகாரியாக (சர்வாதிகாரியாக) நடந்து கொண்டார்.

உரிமைகள் குறையக் குறைய ஆங்காங்கு ஒவ்வொரு மாநிலத்திலும் இன உரிமைப் போராட்டங்கள் மக்கள் எழுச்சியாக கொப்பளிக்கத் வைத்தன. அவை அவ்வாறே தொடர, அடுத்துப் பொறுப்பேற்ற இராசீவ் பஞ்சாபில் வன்மமாக இன அழிப்பைச் செய்து கொண்டிருப்பதுடன், தமிழின அழிப்பையும் தமிழீழத்திலிருந்து தொடங்கியுள்ளார். இவரின் பெயரில் உள்ள 'காந்தி' என்றபெயர் இவர் ஏதோ புனிதர் போலக் காட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால், இவரோ, அந்தப் பெயரடைக்கு நேர் எதிரான இன அழிப்பு வேலைகளைச் செய்து கொண்டு வருகிறார். இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபடும் இவர் காந்தியின் பெயரில் உலாவருவது தேசிய இனக் காப்புக்கும் பெருந்தன்மைக்கும் மாறானதல்லவா?

—குன்றன்.

Scanned with CamScanner

சென்னையில், ஈழத்தமிழர் உரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்பின் அரிய செயற்பாடுகள்!

நீண்ட நெடிய ஊர்வலம், உண்ணாநோன்பு, 'மனிதச் சங்கிலி' - என்னும் புதிய போராட்ட முறை - ஆகியவற்றைச் செய்தது.

தமிழீழத்தில் அமைதி ஏற்படுத்தும் நோக்கத்துடன் சென்ற இந்திய அமைதிப் படை (I.P.K.F), அங்குச் சென்ற பின்னர், சிங்கள செயவர்த்தனேவுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு, அங்குள்ள தமிழ் மக்களையே திட்டமிட்டு அழிக்கும் கருத்துடனும், போராளிகளின் தமிழீழ விடுதலைப் போராட்ட முயற்சியையே சிதைக்கும் நோக்கத்துடனும், வன்முறையில் போர் முயற்சியில் ஈடுபட்டது உலகம் அறிந்த வல்லாண்மைச் செயலே!

இதைக் கண்டிக்கும் நோக்கத்துடன் தமிழகத்தில் அனைத்து நடுநிலைக் கட்சிகளும் பலவகையான எழுச்சிப் போராட்டங்களை நடத்தின. எதிர்க்கட்சியான தி.மு.க., தி.க., சனதாக் கட்சி, நெடுமாறனின் காமராசு பேராயம், சகசீவன்ராம் பேராயம், அம்பேத்கர் கட்சி, போன்றவை இந்தியப் படையின் மாந்த நேயத்திற் கெதிரான கொடுமைகளைக் கண்டித்தும் இந்தியப் படையை யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறவும் வலிவான முறையில் குரல்கொடுத்தன.

இக்கட்சிகளின் நடுநிலையான ஞாயமான எதிர்ப்புக் குரல்கள் அரசியல் ஊதியம் கருதுபவை என்று இந்திய ஆளுங்கட்சியான இந்திரா பேராயத்தாலும், தமிழக ஆளுங்கட்சியான அண்ணா தி.மு.க. வாலும் கொச்சைப் படுத்தப் பட்டன.

ஈழத்தமிழர் உரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்பு:

இந்நிலையில், சென்னையில் உள்ள அறிஞர்கள், பாவலர்கள், இதழாசிரியர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் முதலிய அரசியலில் ஈடுபாடு கொள்ளாத அனைத்துத் தரப்பினரும் கடந்த அக்டோபர் மாதத்தில் ஒருங்கிணைந்து '**ஈழத்தமிழர் உரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்பு**' என்னும் ஓர் அமைப்பை உருவாக்கினர்.

இந்த அமைப்பை முதன் முதல் உருவாக்கி அறிவித்த பெருமை பாவலர், பேராசிரியர் **மு. மேத்தா,** பேராசிரியர் **சுப. வீரபாண்டியன்,** திரைப்பட இயக்குநர் **குகநாதன்** ஆகியோரையே சாரும்.

கூட்டமைப்பின் முதல் முயற்சி: நெடிய ஊர்வலம்:

இவர்களின் அரிய முயற்சியால், கடந்த 16-10-87-இல் சென்னை, மந்தைவெளிப் பேருந்து நிலையத்திலிருந்து, விடுதலைப் புலிகள் அலுவலகம் உள்ள இந்திரா நகர் வரையில், அன்று மாலை 6 மணியளவில் பெரியதோர் ஊர்வலம் திட்டமிட்டு நடத்தப்பெற்றது. - ஊர்வலத்தில் ஏறத்தாழ ஐயாயிரம் பேர் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்திற்குப் பாவலர் **மு. மேத்தா** தலைமை யேற்றார். திருவாளர்கள் **சுப. வீரபாண்டியன், குகநாதன்,** திரைப்பட நடிகர்கள் **செய் கணேசு, விசயகுமார்** ஆகியோர் துணைநின்றனர்

இதில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்,** பேராசிரியர் **சாலை. இளந்திரையனார்,** பேரா. **சாலினி. இளந்திரையனார்,** பாவலர் **சுரதா,** பெருங்கவிக்கோ. **வா. மு. சேதுராமன்,** பாவலர் **இன்குலாப்,** செல்வி **அருள்மொழி,** பேரா **மறைமலை,** பேரா. **சரசுவதி** 'வள்ளுவர் வழி' ஆசிரியர் **கண்ணன்,** முதலியோர் ஊர்வலத்தின் முன்னணியினராகப் பங்கேற்றனர். அத்துடன், மா. பூங்குன்றன், மா. பொழிலன், தென்மொழி நா. இளமாறன், குணத் தொகையன், முகிலன், செம்பியன் வல்லத்தரசு, ஆகுன்றன் முதலிய உ.த.மு.க. தொண்டர்களும், அறிவியக்கப் பேரவைத் தொண்டர்களும், தி.க. தொண்டர்களும், காமராசு பேராயக் கட்சித் தொண்டர்களும் ஏராளமான அளவில் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் ஏறத்தாழ 6 கல் தொலைவைக் கடந்து இரவு 9 மணியளவில் இந்திரா நகரை அடைந்தது. ஊர்வலத்தில்,

"போரை நிறுத்து, போரை நிறுத்து
இந்திய அரசே போரை நிறுத்து"

'உரிமை காப்போம் உரிமை காப்போம்
ஈழத்தமிழர் உரிமை காப்போம்'

'அமைதிப் படையா கூலிப்படையா?'

'ஆதிக்க வெறிபிடித்த இந்தியப் படையே
விடுதலைப் புலிகளோடு போர் நடத்தாதே'

'இந்தியப் படையே இலங்கையை விட்டு
வெளியேறு'

'பிரபாகரனுக்குக் ஆபத்தென்றால்
பிரளயம் இங்கே உருவாகும்'

'உலகத் தமிழர்களே ஒன்றுபடுங்கள்'

'அமைதி ஒப்பந்தமா?
தமிழினத்தை அழிக்கும் தீப்பந்தமா?'

'இந்திய இனவெறி அரசு ஒழிக'

'ஈழர் நாடு தமிழர் நாடு
இந்திய நாயே வெளியேறு'
'தமிழீழக் கோரிக்கை தள்ளுண்டு போனால்
தமிழ்நாடு இங்கே பிளவுபடும்!'

போன்ற கொள்கை முழக்கங்களும், கோரிக்கைகளும் விண்ணைப் பிளந்தன. ஊர்வலத்தின் இருமருங்கிலும், முன்னிலையிலும் காவலர் படையினர் இருநூற்றுக்கும் மேற்பட்டவர்கள் புடைசூழ்ந்து காவல் காத்து வந்தனர். ஊர்வலம் ஏறத்தாழ இரண்டு படைச்சால் (Furlong) தொலைவிருந்தது. ஊர்வலத்தைத் திரைப்படமாகவும், ஒளிப்படமாகவும், ஒளி நாடாப் பதிவாகவும் எடுத்தனர்.

இரவு 9.30 மணியளவில் இந்திரா நகரில் விடுதலைப் புலிகள் இருக்கும் தெரு முனையை ஊர்வலம் சென்று அடைந்ததும், சிறிது நேரம் பெரிய முழக்கங்கள் இடம்பெற்று, ஊர்வலத்தினர் ஒருங்கிணைந்து கூட்டமிட்டு அமரவும், அமைப்பாளர்கள் சிலர் உரையாற்றினர். இறுதியில் 'இலங்கையில் உள்ள இந்தியப் படை உடனடியாக வெளியேற வேண்டும்' என்றும், 'இதுவரை வீரதீரமாகப் போராடித் தமிழீழத்திற்காக உயிர் ஈகம் செய்தவர்களுக்கு வீரவணக்கம் செலுத்துவதாகவும்' ஒருமுகமாகத் தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

அதன்பின் அமைப்பாளர்களும், முகாமைத் தலைவர்களும், விடுதலைப் புலிகள் இயக்கத் தளபதி கிட்டுவைச் சந்தித்துப் பேசினர். பின், கிட்டு அவர்களை ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் வரிசையாகப் பார்த்து வீர வணக்கம் செலுத்தினர்.

இரவு 11.30 மணியளவில் அனைவரும் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

இவ்வூர்வலம், பிற அரசியல் கட்சி ஊர்வலங்களைக் காட்டிலும், உணர்வெழுச்சி யுடையதாகவும், மக்களுக்கு உரமூட்டுவதாகவும் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அனைத்துக் கல்லூரி மாணவர்கள் உண்ணுநோன்புக்கு ஆதரவு:

தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், இந்திய அமைதிப் படை யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறக் கோரியும், சென்னை, சட்டக் கல்லூரி மாணவர்கள், கடந்த 20-10-87 அன்று குறளகத்திற்கு எதிரில் **உண்ணு நோன்பு** மேற்கொண்டனர்.

அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் **'ஈழத்தமிழர் உரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்'பின்** அமைப்பாளர்கள் அங்குச் சென்று மாணவர்களின் போராட்ட முயற்சியை வரவேற்று வீறுரையாற்றினர். உரையாற்றியவர்களில், நெடுமாறன், பேரா. சாலை. இளந்திரையனார், பேரா. சாலினி இளந்திரையனார், பேரா மேத்தா, குகநாதன், ஞானி, பேரா. மறைமலை, பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன், பாவலரேறு பெருஞ்சித்திரனார், ஈழவேந்தன், செல்வி அருள்மொழி முதலியோர் முகாமையானவர்கள் ஆவர்.

கூட்டமைப்பின் உண்ணுநோன்புப் போராட்டம்!

கூட்டமைப்பின் மூன்றாவது முயற்சியாகக் கடந்த 22-10-87 அன்று, கூட்டமைப்பைச் சேர்ந்த அமைப்பாளர்கள் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்,** பெருங்கவிக்கோ. **வா. மு. சேதுராமன்,** பாவலர் **மு. மேத்தா, சுப. வீரபாண்டியன், ஞானி, மூர்த்தி, அக்னிபுத்திரன், பேரா. மறைமலை,** முதலியோர், சென்னை, குறளகம் எதிரில் உண்ணுநோன்பிருந்தனர். அவர்களை ஊக்குவிக்கும் வகையில் பேரா. **சாலையார்,** பேரா. **சாலினியார்,** இயக்குநர் **குகநாதன்,** செல்வி அருள்மொழி, சட்டக் கல்லூரி மாணவர் சிலர் ஆகியோர் உண்ணுநோன்பிருந்தவர்களுடன் சில மணிநேரம் இணைந்திருந்தனர். அத்துடன் தென்மொழிக் குடும்பத்தவர்களான புலவர் **இறைக்குருவனார், பொற்கொடி இறைக்குருவனார், தாமரை பெருஞ்சித்திரனார்,** செந்தாழை ஆறிறைவன், பிறைநுதல், இசைமொழி, தமிழ்ச்செம்மல், கயல்விழி, சிறுவன் செந்தணல் ஆகியோரும் உண்ணுநோன்பில் கலந்து கொண்டு உடனிருந்தனர்.

மாலை 6 மணியளவில் அன்பர்களின் விளக்கவுரை வீறுரைக்குப் பின்னர் உண்ணுநோன்புப் போராட்டம், பழச்சாறு அருந்துதலுடன் நிறைவுற்றது.

மாந்தத் தொடரி (மனிதச் சங்கிலி)ப் போராட்டம்.

கூட்டமைப்பின் அடுத்த போராட்டமாக **'மக்கள் தொடரி'** (மனிதச் சங்கிலி) என்னும் போராட்டம் நிகழ்ந்தது.

விழாக்களில் ஆணும் பெண்ணுமாகக் கைகோத்துக் கொண்டு ஆடிவந்த நடனம், ஒரு வடிவம் எய்தி 1960-ஆம் ஆண்டு அளவில், ஒரு போராட்ட அமைப்பாக மாறியது. அக்கால் அமெரிக்கா வியட்நாம் மீது கடுமையான போரை நடத்திக் கொண்டிருந்தது. இந்தப் போரை அமெரிக்க மக்களே எதிர்த்தார்கள். அந்த எதிர்ப்பைக் காட்டும் வகையில் அமெரிக்காவிலுள்ள பொதுமக்கள், அறிஞர்கள், மாணவர்கள் பெரும்பாலார் கைகளைக் கோத்துக் கொண்டு வரிசையாக நீள நின்று, வியட்நாம் மீதான அமெரிக்கப் படையெடுப்பைக் கண்டித்துத் தொடர்ந்து முழக்கமிட்டனர்.

(தொடர்ச்சி 10 ஆம் பக்கம்)

Scanned with CamScanner

இந்திய அரசியல் அகராதி!

-குன்றன்-

அரசியல் ஒப்பந்தம்: (அ)- சிறுபான்மையோரை முழுவதுமாக அழித்துவிடப் பெரும் பான்மையோர் தலைவரும், பொது என்று சொல்லிக் கொண்டு தலையிடும் அண்டை நாட்டுத் தலைவரும் இணைந்து கொள்ளும் கழுக்கக் இனக் கிழறுப்புத் திட்டம்.

(ஆ)- நாட்டு மக்களைக் கொன்றுவது நாட்டுக் கொள்கையை நிலை நிறுத்தப் பாடுபடும் படைத்துறை நடவடிக்கை.

(இ)- இரு நாடுகளின் பொதுச் சிறுபான்மையினரை அடக்க, வல்லாளுமைப் பெரும்பான்மை ஆட்சியினர் இணைந்து கொள்ளும் தந்திரம்.

இலங்கை: (அ)- சிங்களவர், தமிழர் என்ற இரண்டினம் வாழ்ந்தாலும், பாகுபாட்டினால் சிறுபான்மைத் தமிழர்களை அழித்துவிட்டு தமக்குத் தாமே தனி அதிகாரத்தை உடைமையாக்கிக் கொண்டிருக்கும் உரிமை படைத்த நாடு.

(ஆ)- திரிகோண மலையை அமெரிக்காவிற்கு விற்றதன்வழி, அமெரிக்காவிற்குச் செல்லப் பிள்ளையாகிக் கொண்டு அதன் உள் நடவடிக்கைக்கு அமெரிக்காவை அரணாக அமைத்துக் கொண்ட நாடு.

தமிழீழம்: (அ)- தமிழினத்திற்கு முதன் முதலாக அமையவிருக்கும் நாடு என்று உலகத் தமிழர்களால் எண்ணப்படுகிற நிலப்பகுதி.

(ஆ)- நாட்டைப் பெறுவதற்காக முதன் முதலாகக் குருதியைப் பிழிந்து கொண்டிருக்கிற உணர்வுள்ள தமிழர்கள் வாழும் சிங்களவர்களுக்கு அடிமைப்பட்ட பகுதி.

(இ)- இலங்கை வாழ் தமிழர்கள் கற்பனையில் தாங்கள் வாழும் பகுதியை நாட்டுப் படமாக வரைந்து கொண்டதாக இலங்கை, இந்தியர்களால் எண்ணப்படுகிற நாடு.

விடுதலைப்புலிகள்: (அ)- தமிழரல்லாதவர் என்று இராசீவால் இன விளக்கம் கூறப் படுபவர்கள்.

(ஆ)- தங்கள் நாட்டைத் தாங்களே ஆள வேண்டும் என்ற பேராசை கொண்டவர்கள் என்ற குற்றஞ் சாட்டப் படுபவர்கள்.

(இ) ஏராளமான தமிழர்களை அமைதிப் படையினர் கொன்று குவிக்கக் காரணமாய் இருப்பவர்கள் என்று சாக்குக் கூறப் பயன்படுபவர்கள்.

(ஈ)- அமைதிப் படையினர் நிரம்பப் போர்க் கருவிகளை ஏந்திச் சென்று கொன்று குவித்தாலும் அமைதிக்கு வரவில்லை என்று பழி சாட்டப் படுபவர்கள்.

இந்தியா: (அ)- வறட்சிகெனக் கூடுதல்வரி திரட்டி நாளொன்றுக்கு இலங்கைக்கு அனுப்பப் பெற்ற படைக்கு மட்டுமே 3 கோடி அளவில் செலவிட்டு, அண்டை நாட்டில் அமைதியை ஏற்படுத்தவல்ல ஆற்றல் படைத்தர்க் கூறப்படும் ஏழ்மையான நாடு.

(ஆ)- பிரித்தானிய ஒலிபரப்புச் செய்தியை உடனுக்குடன் தலை கீழாக மாற்றி மாற்றிப் பரப்பும் பொய் கூறக் கூசாத மிகப்பெரிய மக்களாட்சி நாடு.

(இ)- தனியார் செய்தி நிறுவனங்களையும், செய்தித் தாள்களையும் உண்மைச் செய்தியைக் கூறவிடாமல் ஒடுக்கி, இந்தியாவை மற்றொரு சோவியத்தாகப் புனைவு செய்து கொண்டு வரும், சோவியத்துப் பிடிக்குட்பட்ட பெருங்குடியரசு நாடு.

அமைதிப்படை: (அ)- யாழ்ப்பாணத் தமிழர்களை அடிமைப்படுத்த ஏராளமான படைக்கருவிகளை உணவுப் பொருள்களின் போர்வையில் மறைத்துக் கொண்டு செல்கிற "மாந்தநேய"ப்படை.

(ஆ)- சிங்களப் படையின் கொடுமைகளுக்குத் தப்பி வாழ்ந்து கொண்டிருக்கும் எஞ்சிய தமிழ்மக்களையும் அமைதியாகத் தீர்த்துக்கட்டச் சென்றிருக்கும் இந்தியப் படை.

தொலைக்காட்சி: (அ)- இந்தி மட்டுமே அதிகமாகப்பேசத் தெரிந்த தொலைத் தொடர்புக் கருவி.

(ஆ)- முகாமையான சில அறிவு வளர்ச்சிக் காட்சிகளையும், சிறிது தரமென்று கருதுகிற பொழுது போக்கு, கலைகளையும் இந்தியில் — இந்தி மக்களுக்கு மட்டும் புரியும் வண்ணம் தரும் இந்தி(ய)நாட்டு நிறுவனம்.

(இ)- தலைமையமைச்சரின் நிகழ்ச்சிகளை அன்றடம் காட்டிக் காட்டி மக்களின் மூளைகளைப் பித்துப் பிடிக்கச் செய்யும் (தொலை)க்காட்சி நிறுவனம்.

(உ)- இந்திய அரசியல் கொள்கைக்குத் தகுந்தவாறு உண்மைச் செய்திகளைத் திரித்துத் தருவதில் திறமை மிக்க செய்தி நிறுவனம்.

தமிழகத் தமிழர்கள்: (அ)- பெரியார், காமராசர், அண்ணாத்துரையுடன் இறந்து போய்விட்டவர்கள்.

(ஆ)- தமிழினத்துக்கு அழிவு வந்தது என்றால் அடுத்த நிமிடமே தமிழை மறந்து இந்தி பேசத் துணியும் துணிவானவர்கள்.

(இ)- அரசியல் பதவி ஒன்றிற்கு மட்டுமே அங்காந்திருக்கும் தமிழினத் தலைவர்களைப் பெற்றவர்கள்.

0

Scanned with CamScanner

அரப்பா நிலத்தில் வாழ்ந்த மக்களின் நிலை
(Reading the Mind of the Harappans.)

முனைவர். எச். டி. சங்கலியா
தொல் வரலாற்றுப் பேராசிரியர்

கீறிய ஓவியங்கள்:

கணிப்பொறி இவ்வகையில் நமக்குக் குழப்பத்தை ஏற்படுத்தும் போது வேறு வழிகளையும் நாம் ஆராய வேண்டியுள்ளது. அவ்வாறு ஆராயும் போது இந்த எழுத்துகளைப் படிக்கும் முயற்சியைச் சற்று நிறுத்தி, அரப்பா நாகரிகத்தைப் பற்றி ஆராய முன்வரலாம். சிந்து மட்பாண்டங்கள் போன்றவையே அரப்பாவில் கிடைக்கும் மட்பாண்டங்களும். இவற்றின் காலம் கி. மு. 2500 முதல் கி. மு 1000 வரையாக உள்ளது. இக் காலத்தில் செம்பு பயன்பட்டு வருகிறது இரும்பு கண்டு பிடித்ததைப் பற்றிக் குறிப்பில்லை. இப் பாண்டங்களில் கோடுகளும், உருவங்களும் கீறப்பட்டுள்ளன. சுட்ட பின்பும் கூட அவை கீறப்பட்டதைக் காணமுடிகிறது. இவற்றைக் கீறிய ஓவியங்கள் (Graffiti) என்கிறோம்.

முதன் முதலாக இவ்வகை நாகரிகம் 1945 இல் கர்நாடக மாநிலத்துப் பிரம்மகிரியில் கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பின் மராட்டிய மாநிலத்தின் சோர்வே, நாசிக், நிவாசா போன்ற இடங்களிலும், நடுவண் மாநிலத்து நவ்தோலி முதலான இடங்களிலும் குசாரத்தில் சோமநாதிலும் கண்டறியப் பெற்றது. இவற்றின் காலத்தைக் கரி 14 முறையில் உறுதி செய்யப் பெற்றது.

சில கீறிய ஓவியங்கள் B.B. லால் என்பவரால் விரிவாக ஆராயப்பட்டுத் தீர்வு செய்யப் பட்டது.

எவ்வாறாயினும், சிந்து நாகரிகத்தைப் புதிதாகவோ பழைய ஆய்வினின்று மேலும் கண்டுபிடிப்பதாகவோ யார் எப்போது ஆயப்புகுந்தாலும் சிந்து நாகரிகம் திரவிடர்கள் அல்லது முந்தை திரவிடர்களுடையது என்ற ஈராசின் நல்கையை எடுத்துக் கொண்டேயாகல் வேண்டும். மேலும் ஈராசு காலத்திற்குப் பின் வெளிவந்த (1961) பேராசிரியர்கள் சி. பரோ (C. Burrow), எம். பி. எமினோ (M.B. Emaneau) இருவரின் Dictionary of Etymological Dravidian என்ற நூலில் பயனை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வாய்ப்பில்லால் போய் விட்டது.

மேலும் ஈராசின் கவனம் முழுவதும் அவரின் ஆய்வுகளில் ஏற்படும் அடிப்படை மெலிவைச் சரி செய்வதாகவே இருந்தது. இதில் எழும் சிக்கல் என்னவெனில், சிந்துவெளி முத்திரைகளிலுள்ள அதன் முந்தை திராவிட எழுத்துகளுக்கும், தமிழ்க் கல்வெட்டுக்கும் மற்றும் தமிழ்கழகப் பாடல்களுக்கும் 2000 ஆண்டுகள் வேறுபாடு இருந்திருக்க வேண்டும். இவ்வளவு கால வேறுபாட்டில் ஒரு மொழி தன்நிலை மாறாமல் இருந்திருக்க இயலாது. எனவே வாழும் மொழியை நேரடியாக ஒப்பிடுவதை மிகவும் எச்சரிக்கையாகக் கையாளுவதுடன், அறிஞர்கள் சிலர் எண்ணுவதற்கேற்ப முரண்பாடாகவும் ஆகிவிடலாம்.

அவரின் கருதுகோள் உண்மையாக இருப்பதற்கு மேலும் சில கூறுகள் உள்ளன. "மொகஞ்சதாரோ மக்கள் திராவிடர்களாகவும், பேசிய மொழி திராவிட மொழியாகவும் இருக்க வாய்ப்புகள் நிரம்ப உள்ளன. அதே நேரத்தில் மொழியும், இனமும் முழுக்க வேறானது என்ற நிலையும் உண்டு. மேலும் மொகஞ்சதாரோ மக்கள் இப்போதைய மொழியை அவ்வாறே பேசவில்லை. ஒரு பழைய மொழியைப் பேசினர். அது முந்தைய திராவிட மொழியின் வடிவில் இருந்தது என்று கூறலாம். முந்தைய திராவிட மொழியின் அமைப்பை அதன் வேர்ச் சொற்களின் வழி கண்டறிய முடியும்; அதன் மூலப்பொருளை அதன் வேரிலிருந்து உடனடியாகக் கண்டுபிடித்து விட முடியும். திராவிட மொழிகள் அனைத்தும் முன், பின் ஒட்டுகளினாலான ஒட்டு நிலை மொழிகளாகும்." - இவற்றை ஈராசு கூறியதாக ஞானப்பிரகாசர் தாம் எழுதிய தமிழ்மொழியின் சொற்பிறப்பியல் ஒப்பீட்டு அகராதியில் குறிப்பிடுகின்றார். மேலும் "அந்த முன்னொட்டையும் பின்னொட்டையும் அகற்றி விட்டால், அம் மூலச் சொல்லின் வேர்ச் சொல் எளிதாகத் தெரியும். அது நிலையானது. காலத்தால் மாறுபடாதது" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பட எழுத்துகளின் பொருள்:

மொகஞ்சதாரோ எழுத்துகளைப் படிப்பதற்கு ஒலி வடிவத்தை எடுத்துக் கொண்டு, அவற்றை நடை முறையில் வழக்கிலுள்ள திரவிட மொழிகளையும், வழக்கில் குறைவாகப் பயன்படுத்தப் பெறும் துளு, குடகு, உரோவன், குயி, ஆகிய மொழிகளையும் முறைப்படுத்தி அதன் முழுச் சொல் வடிவத்தையோ அல்லது அவற்றின் வேர் மட்டுமோ கொண்டு எங்கெங்கு எவற்றைப் பொருத்த முடியுமோ அங்கங்கெல்லாம் பொருத்தித் தம் ஆய்வை விரிவு படுத்திச் செய்துள்ளார். எனவே அவரால் சில அடிப்படைக் கருத்திற்கு வரமுடிந்தது. அம் முடிவை பேர்செர்விக (Fairservis) திரவிடமொழி சொற்பிறப்பியல் அகரமுதலி கொண்டு உறுதிபடுத்துகிறார்.

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்

Scanned with CamScanner

இன்றே இணையுங்கள் உ.த.மு.க.-வில்!

'எழுக தமிழர்' எனப் பள்ளியெழுச்சி பாடியா-யிற்றுயினுமித் தமிழனம் விடும் குறட்டையொலி நின்றபாடில்லை. 'தமிழா இனஉணர்வு கொள்'ளென்ருல் 'அஃதெங்குக் கிடைக்கும்' எனக் கண்களைத் திறக்காமல் நாவை மட்டிலும் அசைத்து ஓசையெ-ழுப்பிவிட்டுக் குப்புறப் புரண்டு கொள்கின்ருன். 'சிறுத்தையே வெளியில் வா' என்ருல் 'ஈகீம், நான் வரமாட்டேன். சீ, போ' என்கின்ருன். 'ஏறு நடை போட்டு நட' வென்ருல், 'நடக்கமாட்டேன். ஊர்தியில் வேண்டுமாளுல் ஏறிக்கொள்வேன்' என அடம் பிடிக்கின்ருன். எக்காள ஏப்ப வூளையிடுகின்ருன், கள்ளையுங் கண்டதையும் மண்டிவிட்டு.

இவன் தலையிடாத புலனமேயில்லையெனலாம். ஆட்களைத் திரட்டுவான். ஊர்வலம் போவான். வகை வகையான வண்ணக் கொடிகளைக் கைகளில் ஏந்திப்பல்வேறு ஒலி முழக்கங்களை யெழுப்புவான். கூட்டம் போடுவான். மேடையேறி அனல் பரக்க முழங்குவான்; தீர்மானம் வடித்தெடுப்பான். கை-யொலியெழச் சிலிர்த்து நிற்பான். விட்டால் இவன் ஒருவனே போதும் முழு ஈழத்தையு மெடுத்துத் தனியரசமைத்துத் தந்துவிடுவா னென்கிருற் போன்ற வீருர்ப்புக் கொப்பளிக்கும். கூட்டம் முடியும், விழுந்த மாலைகளையும் துண்டுகளையும் தரப்பட்ட பணத்தையும் மனத்திலேயே கணக்கிடுவான். இறங்கிச் சென்று எதிர்ப்படும் மதுக் கடைகளின் காசறைகளை நிரப்புவான். களிப்பின் மயக்க மிகுதியால் திரைப்பட அரங்குகளாம் எதிரிகளின் கோட்டை. கொத்தளங்களைப் முண்டியடித்துப் பிடிப்பான். உள்ளே சென்று உணர்ச்சி வயப்பட்ட-வனுய் உதைபடுவான்.

உப்புக்கல்லுக் குதவா தனவற்றுக் கெல்லாம் இவன் செய்வான் போராட்டம், மறியல், கல்லெறி, கடையடைப்பு என. இவற்ருல் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசவேண்டிய நிலைமை வரும். எனவே, காவல் துறையினரின் கால விணடிப்பு, அனைவர்க்கும் அலைப்பறை, தொல்லை, துயர், படிப்பு நாசம், பொதுச் சொத்து அழிவு, அரசின் (மக்களின்) பணம் வெட்டியாதல் என்ருகும். அனுல், உயிர் மூச்சென்ருகும் மொழிக் கலப்பு நீக்கம், ஈழத் தமிழர்க்கு விடிவு என்பன போன்றவற்றில் சரியான ஈடுபாடு கொள்ளான்; ஏனோ தானோ என நடந்து கொள்வான்.

அதே நேரம் திரைப்பட நடிகக் கழிசடைகளுக்கு மன்றங்கள் திறப்பான். அவற்றிற்கு விழாக்கள் எடுப்பான். விழாத் தோரணங் கட்ட மேலேறிக் கீழ் விழுந்து விலாவெலும்பை முறித்-துக் கொள்வான். மாக் கட்டுகளோடும் திரையில் மின்னி மறையும் எந்த உயர் தன்மையுமற்ற நடி-கர்களைக் கண்ணுலாவது கண்டு விட மாட்டோமா என்னும் வேகத்தில் சென்று மிதிபட்டுச் சாவான். புதுப்படங்கள் வந்து விட்டால் போதும். திரைப் பட அரங்குகள் படாத பாடுபடும். வெட்டுருவங்கள் (கட் அவுட்) வைப்பதி லெத்துணை விறு விறுப்பு! அவற்றுக்கு வகை வகையான மாலைகளைச் சூட்டுவதில் எத்துணைத் துடிதுடிப்பு! உரத்தொலிப்பான்களைக் கட்டி ஊரையே நாறடிப்பதில் எத்-துணை உணர்ச்சிக் கொப்பளிப்பு: இவன் கெட்டதன்றிப் படிக்கும் பிள்ளைகளின் படிப்பையுங் கெடுத்து, நோயாளர்களை வருத்திப் பொது அமைதியையே கெடுத்துச் சீரழிப்பதில் எத்துணைப்பெருங் களிப்பு!

பாடல் யாக்கின்ருனும், பாடல்! சோற்றிற் கல்லைக் கண்டாற் கூடக் கொண்டவளைக் கண்ட-படி ஏசியும் திட்டியும் அடித்து நொறுக்கும் இந்த மானங் கெட்ட மல்லாரி தன் உயிரினும் மேலான தாய் மொழியாம் தமிழ் மொழியிற் பிற மொழிச் சொற்களைக் கூசாது பெய்கின்ருன். பாடல் என்-னும் பெயரிட்டு அவன் தமிழ் மக்களின் முன்வைக்-கும் சொற்ருெகுதியின் மாதிரியைக் கீழே தரு-கின்றேன்.

> "இந்தச் சர்வலோக
> சன்னிதானத்தில் அக்கினிப் புஷ்பமாலை
> ஆரோகணிக்கும் பாரதமாம்
> பூரதத்தின்
> சாரதி எம் பாரதி"

இதெல்லாம் பாடல்! இவனெல்லாம் பாடல் எழுத வந்து விட்டான்! இவன் மொழிப்பற்று எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளது! எப்படியிவன் உருப்படப் போகின்ருனே? எவ்வாறு கரவு மிகு இவ்வுலகில் வாழப் போகின்ருனே?

நரிக் குறவர் என்னும் பெயரில் நாடோடி வாழ்க்கையைத்தம் சொந்த வழக்கமாக்கி ஆடியும் பாடியும் கவலையற்றவராய் வாழ்கின்ருர்களே ஒரு மக்கள் கூட்டத்தினர், அவர்கள் பேசும் மொழியில் தமிழ்ச்சொற்கள் நிரம்ப விரவிக் கிடக்கின்றன. ஆனுல், அவர்களின் மொழியை இந்தி மொழியின் இன மொழி என்னும், சமற்கிருத அடிப்படையைப் பெற்றுள்ளது என்றும் 'இந்தியர்' ஆகிவிட்ட மொழியியலறிஞர்கள் தமக்கு வாய்ப்பாகவுள்ள செய்தித்தாள்கள், வானெலி ஆகியவற்றின் வழி வெளியிடுகின்றனர். இது மட்டிலுமன்று, உலகம் முழுவதும் பரவலாய்ச் சிதறிக் கிடக்கும் 'சிப்சி' என்றழைக்கப்படுகின்ற மக்களின் பேச்சு மொழிக்கும் சமற்கிருந்தான் அடிப்படையாம். ஆராய்ச்சி பண்ணிச் சொல்கின்ருர்களாம்! அண்மையில் தவளைகள் பல வகை மொழிகளைப் பேசுகின்றன என மதுரைப் பல்கலைக் கழகம் கண்டு பிடித்துள்ளது. இந்தத்

தவளைகளின் மொழிகளாகட்டும், நாய்களின் குரைப்புகளாகட்டும், கழுதைகளின் கத்தல்களாகட்டும், பன்றிகளின் உறுமல்களாகட்டும், எலிகளின் கீச்சிடுதல்களாகட்டும், பலவகைப் பறவைகளின் ஒலிகளாகட்டும், யானையின் பிளிறலாகட்டும், அரிமாவின் உரருகட்டும் எல்லாவற்றுக்குமே அடிப்படை சமற்கிருதமென்றுதான் 'இந்த ஆராய்ச்சியாளர்கள்' கண்டுபிடித்துச் சொல்லப் போகின்றார்கள். இவற்றையெல்லாம் அரைகுறையாகப் படித்துவிட்டு இவன் - இந்தத்தமிழன், "ஆமாம், ஆமாம், அனைத்துக்குமே அடிப்படை சமற் கிருதந்தான், இல்லா விட்டால் வானொலியிற் சொல்வார்களா? இல்லை, செய்தித் தாள்களில் வெளியிடுவார்களா? இல்லை, சொன்னவர்கள்தாம் எளிதுப் பட்டவர்களா? எவ்வளவு பெரிய படிப்பாளிகள்? மேல்நாடெல்லாம் போய்ப் படித்து வந்தவர்கள் ஆயிற்றே!" என ஏன்று (வக்காலத்து வாங்கி)க் கொண்டு இளித்த வாய்த்தனமாய் உளறுவான். இவனுக்கு மொழித் தூய்மையென்றால் என்னவென்றே தெரியாது. 'அது கனி நிறை (க. நி. - கிலோ கிராம்) என்ன விலைக்கு விற்கப்படுகின்றது' என்று கேட்கும் நிலையிலிருக்கின்றான் மூளையைச் சலவைக்கு விட்டுவிட்ட இந்த ஏமாளி.

ஈழத்திலே எந்தமிழர் சிங்கள இந்தியப் படை நாய்களால் கடித்துக் குதறப் படுகின்றனரே என்ன பண்ணிக் கிழித்துவிட்டான் இவன்? ஆளுக்காள் ஒருபேச்சு ஆளுக்கொரு நாள் அடையாளப் போராட்டம் இவைதாமே இவன் செய்தவை. ஒட்டு மொத்தமாகக் கட்சி மயக்க மின்றி இந்தப் பொதுப் புலனத்திலாவது திரளக் கூடாதா? ஏன் இவனுடைய மனம் விரிவோடிப் பொறிந்து கிடக்கின்றது? எதற்குமே பயன்படா அரசியல், மதம் ஆகியவற்றின் விழாக்களிலே இவனுக்கேன் இவ்வளவு ஈடுபாடு? எவ்வளவு அக்கறை? அவற்றின் பொருட்டு எத்தனை வெறுப்பு வேகாட்டங்கள், ஏசல் இழிவுகள், சண்டை சச்சரவுகள், வெட்டுக் குத்துகள், குழப்புக் குணக்கல்கள்! உலகத்திலுள்ள ஒவ்வோரினமும் தம் தனித்தன்மையைப் பேணிக் கொண்டு சீருஞ்சிறப்புமாய் வாழ்வதைக் கண்டுங் கேட்டுங் கூட இவனுக்குச் சொரணை வரவில்லையே! இவனுக்கென்ன மரமண்டையா? மண்டையினுள்ளிடென்ன களிமண்ணா? இவனுடைய மேலின் தோலென்ன எருமைத் தோலா?

இப்பொழுது ஈழத்தமிழரின் மேல் ஏற்றப்பட்டிருக்கும் ஒப்பரவு ஒப்பந்தம் என்னும் தமிழின அடிமைப் பட்டயத்துக்கு எத்தனை வகை போற்றிப் புகழ்ச்சிகள் செய்கின்றான், இவன். எத்துணை ஏமாளி இவன் என்பதற்கு எடைக் கல்லாகிய இதனை என்னமாய் வரவேற்கின்றான்! இவ்வொப்பந்தத்தை எதிர்க்கும் இவனை ஏலமாட்டாதவன் போல் முனகுகின்றான். யார்யாரையோ துணைக்கு இழுக்கின்றான். இவனுக்கு இவன் மேலேயே நம்பிக்கை இல்லை. இவன் பேச்சை எந்தத் தகுதியுமில்லாதவனைப் பக்கத்துணைக்கு வைத்துக் கொண்டுதான் தொடங்குகின்றான். இதால் அந்த அறிமுகமேயில்லாத அயலவன் இந்த ஏமாளித் தமிழர் கூட்டத்திற்குத் தெய்வத் தலைவனாகி விடுகின்றான்; பின் இந்த மக்களின் முதுகுகள் சேணங்கட்டிய குதிரையாகி அவன் தேன்குடித்த நரிபோல் ஆடவும் அதைக் கண்டு கை தட்டி ஆரவாரஞ் செய்து சீழ்க்கையடிக்கவும் தளமாகின்றன.

இதைப்பற்றி இவன் புலம்பித் தவிக்கின்றான். இவன் இவ்வாறு புலம்பிக் கொண்டுதானிருப்பானா? செயலில் ஈடுபாடு கொள்ள மாட்டானா? எண்ணி இறங்க மாட்டானா? அழுது புலம்புவதே இவன் வேலை! அடையாளந் தெரியாத பையலைபெல்லாம் கட்டியழுகின்ற மடையன்! இணையவிடாது தடுத்துக் கொண்டிருப்பவை இவன் தனக்குத்தானே போட்டுக் கொண்ட தளைகளான அரசியலும், மதமும், குலமுமேயாம்.

வறுமையுங் குலக்கொடுமைகளுமே மத மாற்றத்திற்கு அடிப்படைகளாவன. இவற்றிலுங் குலக் கொடுமைகளே முதன்மை பெறுபவை. இக் குலக் கொடுமைகள் எப்படித்தாம் ஏற்பட்டனவோ? தமிழினத்தையே சின்ன பின்னமாக்கிய இக் குலக் கொடுமைகள் இன்றும் பேயாட்டம் போட்டுக் கொண்டுதாமிருக்கின்றன. இன்று குலப்பற்றும், குல வேறுபாடு பார்த்தலும் படித்தோரிடையிற்றான் மிகுதியுங் காணப்படுகின்றன. குலம் இல்லை என மேடை ஏறி முழங்குகின்றார்கள். சம உண்டாட்டிலும் (சம பந்தி) கலந்து கொள்கின்றார்கள். அந் நிகழ்ச்சிகள் முடிந்து அவ்விடங்களை விட்டு நகர்ந்ததுமே குலச் சிக்கல்களில் கால்களை மட்டிலுமில்லாமல் கைகளையும் விட்டுக் கொள்கின்றார்கள். படித்தவர் நிலையே இவ்வாறெனின் படியாதாரைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா!

புதுமை இயக்கங்கள், பொதுமை இயக்கங்கள், பகுத்தறிவு இயக்கங்கள், காந்திவழி இயக்கங்கள் ஆகிய யாவற்றிலுமே குலக் கொழுப்புத் தலைக்கேறிய கோமான்கள்தாம் தலைமையை வலுக்கட்டாயமாகப் பற்றிக் கொண்டிருக்கிறார்கள். தலைமைப் பொறுப்புகளை ஒன்றிரண்டு பெயர்கள் தாழ்த்தப் பட்டவர்களில் பெற்றிருந்தாலும் அந்த கோமான்களின் வேலைக்காரர்களாகவே நடைமுறையிற் செயற்பட வேண்டியதிருப்பது கண்கூடு. பெயருக்குப் பதவிப் பொறுப்பு ஏற்றுள்ள தாழ்த்தப்பட்டோர் அவர்களின் ஆண்டைகளின் கட்டளைகளை அப்படியே பின்பற்ற இயலா நிலைகளில் குலப் பெயரைக் குறிப்பிட்டு வசவுகளையும் ஏசல்களையும் பணிச்சிறப்புப் பரிசுகளாகப் பெற வேண்டியுள்ள நிலைமையே நிலவுகின்றது. இப்படி

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

அயலகத் தமிழரின் வேண்டுகோள்!

சிந்திப்போம், சீரிளம் புலிகளுக்கு வீர வணக்கம் செலுத்துவோம்.

அன்புள்ளம் கொண்ட அருமைத் தமிழர்களே! சிந்திப்போம் சிறிதுநேரம். கடந்த நான்காண்டுக் காலமாக இன அழிவைச் செய்து கொண்டு வந்த செயவர்த்தனே மிகவும் அரசியல் தந்திரமாக இந்தியாவுடன் ஓர் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு (என்ன ஒப்பந்தமோ? யாருக்கும் புரியாத ஒப்பந்தம்) இலங்கைத் தமிழர்களை அழிப்பதற்கும் அடக்குவதற்கும் இந்தியப்படைகளை (கூலிப்படைபோல) அழைத்துக் கொண்டு வந்து, நம் அருமைச் செல்வங்களை அழிக்கிறார்கள்; அழித்துக் கொண்டு வருகிறார்கள்.

இந்தியா ஒரு வலிமை வாய்ந்த படை வலிவைக் கொண்ட ஒரு பெரிய வல்லரசு. அந்த இரும்புக் கை கொண்ட வல்லரசுடன் எதிர்த்துச்சண்டை போட இந்தப் புலிப்படைகள் துணிவார்களா? அவர்களை வம்புக்கு இழுத்து இந்தியப் படைகளோடு மோத விட்ட செயல்திறத்தில் செயவர்த்தனேவுடன் இந்திய அரசுக்கும் பங்குண்டு. இந்தியாவின் பெரும் வலிவு பொருந்திய படைக்குச் சண்டை போட பொதுவாக எங்கள் ஒன்றுமறியாத் தமிழர்கள்தாம் கிடைத்தார்களா? என்னே கொடுமை! உலகத்தாரே! இதை யாரும் தட்டிக் கேட்க யாருமில்லையா?

இந்தியப் படைகள் சண்டையிட வேறு பல இடங்களுள்ளன. தன்னுடைய சொந்த நிலப்பகுதியை இழந்து விட்ட நிலையில், நீர் வார்த்துக் கொடுத்து விட்டு, வெறுமனே இருபது ஆண்டையும் கழித்து விட்டது. சண்டையிட ஆசையென்றால் அங்கே போய் மோதித் தன்னுடைய வலிவையும் காட்டி, நிலத்தையும் மீட்க வேண்டியது தானே.

தங்களுடைய இனமானம், மொழி, கலைகளைக் காக்க தங்களுடைய உயிரைக் கொடுத்தாகிலும் நாட்டையும் மீட்போம் என்று தங்கள் உயிரையே தூசாக எண்ணி ஒரு கையில் குண்டும், மறு கையில் நஞ்சும்(சைனட்டும்)வைத்துக் கொண்டு, சண்டைக் களத்தில் வீரப்போர் புரிகிறார்கள். உயிரை ஈகம்(தியாகம்) செய்கிறார்கள். அவர்களும் எப்படியும் வாழலாம் என்று நினைத்திருந்தால் சிங்களத்தைப் படித்துத் தொல்லையில்லாமல் வாழ்ந்திருக்க முடியும். ஆனால், தமிழுணர்வு அவர்களைத் உலகில் உயர்த்தி விட்டிருக்கிறது.

புத்தர் பிரானும் மகாத்மா காந்தியும் வந்து தோன்றிய இந்திய மண்ணில் பிறந்து அரசாட்சி செய்யும் இராசீவ் காந்தி அவர்களே! உடனடியாக தமிழீழ விடுதலைப் புலிகளைக் கொல்வதை நிறுத்துங்கள். அவர்களிடமிருந்து பெரும் பகுதிப் படைக்கருவிகளைத் தந்திரமாகப் பறித்துக் கொண்டபிறகு நீங்கள் அவர்களை மூர்க்கத்தனமாக விரட்டி விரட்டிக் கொல்வது மாந்தப் பண்பாகாது.

அமைதி காக்கப் போன இந்தியப் படையே செயவர்த்தனேவின் அட்டூழியங்களுக்குத் துணை நிற்கிறது.இதுவா அமைதிகாக்கும் அழகு? இருதரப்பினரையும் உடன் வைத்துப் பேசி நடுநிலையோடல்லவா நடந்திருக்க வேண்டும்? இந்திய அமைச்சரை வைத்துக் கொண்டல்லவா செயவர்த்தனே பிரபாகரன் தலைக்குப் பத்து இலக்கம் விலைபேசுகிறான்.

பஞ்சாபியர்கள் உயிர்களைக் குடிக்க அன்னை இந்திரா படைகளை அனுப்பினார். ஆயிரமாயிரம் பஞ்சாபியர்கள் நெஞ்சை நிமிர்த்திக் காட்டினார்கள். அந்தப் பஞ்சாப் சண்டைக்குப் பிறகு பஞ்சாபியர் விளக்கணி விழா(தீபாவளி)க் கொண்டாட்டத்தைக் கூட அடியோடு நிறுத்தினார்கள். நிறுத்தி விட்டார்கள்.

அதே பாதையில் இந்திராவின் தவப்புதல்வன் இராசீவ்காந்தி அவருடைய பூதத்தனமான பெரும் படைகளை "அமைதி காக்க" என்ற முத்திரையோடு இலங்கைக்கு அனுப்பி வைத்தார். ஆனால் அமைதி காக்கவில்லை. அருமைச் செல்வங்களைத் தமிழீழ விடுதலைப் புலிகளைக் கொன்று குவிக்கிறார்கள். அத்தோடு இந்தியாவின் ஒலி, ஒளி பெருக்கிக் கருவிகள் மூலம் விடுதலைப் புலிகளுக்குக் கெட்ட பெயரை உண்டாக்கித் தப்பான கருத்துப் பரப்பும் செய்கிறார்கள். அவர்களுடைய செய்திகள் அப்பட்டமான பொய் என்பதை, அவர்களுடைய முன்னுக்குப் பின் முரணான பேச்சுகளே தெளிவாக்குகின்றன.

ஆகவே நாம் இங்கிருந்து மாந்த உணர்வோடும் மாந்த உள்ளத்தோடும் "தமிழர்களைக் கொல்லாதே! பொய்ச் செய்தி பரப்பாதே!" என்று தொலைவரி வாயிலாகவோ அல்லது கடித மூலமாகவோ கெஞ்சிக் கேட்டுக் கொள்வோம். அதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை

இன்னும் இரண்டு நாள்கள்தான் உள்ளது இந்துப் பெருமக்கள் கொண்டாடும் தீபாவளி. நம் இளவல்கள் இன்னுயிரை ஈந்து மடிந்து கொண்டு போர்க்களத்தில் இருக்கிறார்கள். ஆகவே, **தமிழ்ப் பெருமக்களே இந்த ஆண்டு எந்த விழாக்களையுமே கொண்டாடாமல், உணர்வுள்ள தமிழர்களாக இருந்து பஞ்சாபியர்கள் தீபாவளியை ஒதுக்கியது போல இல்லா விட்டாலும் இந்த ஆண்டு விழாக்களையாகிலும் துயர நாள்களாகக் கொண்டாடிச் சீரிளம் புலிகளுக்கு வீர வணக்கம் செலுத்துவோம்.**

வாழ்க தமிழீழ விடுதலைப்புலிகள்!
வெல்க தமிழீழம்! வாழ்க தமிழ்!

—**செங்கோட்டையா நல்லையா**, மலேசியா.

'புரட்சி' பேசும் குழுக்களிடையே சீர்கேடு.

புரட்சி என்ற புத்தமைப்பை ஏற்படுத்தல் அவ்வளவு எளிய செயல் ஆகாது. வந்து வந்து மோதும் நடப்புக் காலச் சிக்கல்கள், 'புரட்சி'யாளரை இணைந்து செயல்பட விடாமல் செய்யும். ஆயினும், புரட்சியாளர், மேலும் தம்மை இறுகப் பிணைத்துக் கொள்வதன் மூலம் சிக்கல்களை அறுத்தெறிதல் இயலும்!

கடந்த காலங்களில் புரட்சியாளர் சிற்றெல்லையான, மூவர்தாமும் சேர்ந்து நின்றதில்லை. இந்த 'அடிப்படை' அலகும் உறுதிபெறவில்லை எனில், போலிமையாகக் கூடிக் கலையும் அமைப்புகளில் 'தனிஆள்' சட்டங்களே ஆட்சி செய்து வரும். இதனையே, அனைத்து அமைப்புகளிலும் காண்கின்றோம்!

முரண்பாடு, மோதல் யாவும் 'எதிரிகளை'க் காப்பாற்றவே இதுவரை துணைபுரிந்து வந்துள்ளன. ஆயினும், வளர்ச்சி வேண்டி நடத்தும் கொள்கைப் போராட்டம், 'படிப்'பினை பெருமலே, சிதைந்து போவதற்கான காரணங்களைத் தொகுத்தறிதல் வேண்டும்!

கட்டமைப்பு வேலைகளில் பரபரப்பு மட்டும் காணப்படுகின்றது. அதற்கான முன்னாய்வு, திட்டமிடல், கற்றலில் ஆர்வம், கற்பித்தலில் பொறுமை இல்லாமையைக் காண்கின்றோம்.

மார்க்சியம் படிக்கும் ஒரு குழு, ஒரு புரட்சி அமைப்பின் சீர்குலைவு நடவடிக்கையைப் பற்றி எழுதியிருந்தது. அந்த 'நடவடிக்கைகள்' அனைத்தும சிறுபிள்ளைத் தனமானவை.

ஒரு குழுவிலிருந்து, 'கொள்கை' காரணமாக வெளியேறுபவர் குறைவு. அதன் நடைமுறைகளைத் 'தாங்கிக் கொள்ள முடியாமல்' போகிறவரே அதிகம்!

கட்டுப்பாடு, கட்சிநெறிகள் எல்லாம் ஏட்டில் மட்டுமே உள்ளன. அவை, 'நீக்கவும், சேர்க்கவுமான' நோக்கத்தில் குழுமனப்பான்மை காரணமாக மட்டுமே, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படுகின்றன. **பொறுப்பில் உள்ளவர்கள் அதிகாரங்களைக் கையில் வைத்துக் கொண்டு வேண்டாதவர்களின் நெஞ்சிலும் வயிற்றிலும் குத்துகின்றார்கள்.**

கட்சியிலிருந்து வெளியேறி 'வீட்டில் அமர்ந்து' விட்டால், அவரைக் கண்டு கொள்வதில்லை. அவரே, உள்ளும்புறமும் தாக்குதலைத் தொடங்கினாலும் சரி, வேறு ஓர் அமைப்பில், போய்ச் சேர்ந்து கொண்டாலும் சரி 'எதிரி'யாகக் கருதுகின்றனர் என்பது மெய்யே!

சோர்வும், களைப்பும்பட்டு, அரசியலில் போராடிப் பார்த்து, வெளியேறியவர்களைப் பற்றி 'ஆராய்வது' தேவையானதாகும்!

தன்னலம், அதிகாரப் பற்று, தலைமைவெறி மெலிந்த மனவுணர்வுகள், தகாத பண்புகள் காரணமாகக் குழுக்களுக்குள் ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்துவைக்கவும், கட்டமைப்பை உறுதியாக்கிக் கொள்ளவும் வேண்டும்!

அங்கங்கே பெற்ற பட்டறிவுகளைக் குழுக்கள், பிறபகுதிகளுக்கு எடுத்துச் செல்வதில் அக்கறை காட்டுவதில்லை. அல்லது, அவற்றை மிகைப்படுத்தியோ, சிறுமைசெய்தோ, கைவிடுகின்றன!

முட்டி முட்டிக் குனியும் போக்கு கற்பதில் அடிக்கடி நிகழ்கிறது! தலைமைகளின் கட்டளைகளைப் பின்பற்றுவதில் குருட்டுப் போக்குள்ளது. அவற்றைப் புரிந்து கொள்ளவும், புற, அக நிலைமைக் கேற்பச் செயல்படுத்தவும் வேண்டும்!

—பறம்பை அறிவன்.

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக் கருத்துகளில் முகாமையானது என்னவெனில் படவெழுத்துகளில் பெயர்கள் சொற்களாக அல்லாமல் விளக்கக் குறிப்பாகவே அமைந்துள்ளன. கருத்துகளும், பொது அமைப்புமே மொழியாக உள்ளது. ஈராசு ஒரு பகுதி பட எழுத்துகளை எடுத்துக் கொண்டு அவற்றை மதிப்பிட்டு அவற்றின் பொருளைப் பற்றி ஆராய்கிறார். அவற்றின் பெரும் பகுதியை பேர்செர்விசின் ஆய்வு ஒப்புக் கொள்கிறது.

தொடரும்.

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏட்டிலும், மேடையிலுமாக வெளியிலொன்றும் உள் நடப்பிலொன்றுமாக இருக்கும் இந்தக் கொழுப்பான்களை நம்பி ஏன் தோழர்களே வீணாகிக் கொண்டிருக்கிறீர்கள்?

குலத்தின் நாற்றம் மருந்துக்குக் கூட இல்லாத ஓர் இயக்கத்தைத் தேட வேண்டிய நிலையில் தமிழினம் இன்றிருக்கின்றது. அந்த வகையில் இன்று **'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்'** ஒன்று தான் பாடாற்றி வருகின்றது. எனவே, என் தமிழின இனிய உடன் பிறப்புகளே, உண்மைத் தமிழ் நெஞ்சங்களே, எண்ணிப் பாருங்கள். பல்லோர் பள்ளியெழுச்சி பாடி விட்டனர். தொட்டும் உசுப்பிக் கொண்டிருக்கின்றனர். உறக்கத்திலிருந்து விழித்தெழுங்கள் தோழர்களே! எழுந்து ஒன்றிணையுங்கள். செயலிலிறங்குங்கள். இல்லையானால் இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் ஒரு விடிவுமிருக்காது. இந்தத் தமிழினத்துக்கும் ஒரு விடிவுமிருக்காது. இனியும் நேரத்தை வீணடிக்க வேண்டா. **இன்றே இணையுங்கள் உ.த.மு. கழகத்தில்.** **—நன்னன்!**

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின் இது ஒரு நிலையான போராட்டமாகவே, உருவாகியது. இதனை மேலை நாடுகளில் உள்ள அமைதி இயக்கங்கள், போர் எதிர்ப்பு அமைப்புகள், அணுக்கருவி ஒழிப்பு இயக்கங்கள் பலவும் பின்பற்றி ஒரு நிலையான, பெருமையும் பீடும் மிக்க ஆனால் அமைவான ஒரு போராட்ட வகையாக மாற்றியமைத்தன. பின்னர் இது கேரளாவிலும் பின்பற்றப் பட்டது.

என்வே, இப்போராட்ட முறை நம் மக்களுக்குப் புதுமையான ஒன்றாக இருக்கும் என்று கருதியதால் கூட்டமைப்பில் ஈடுபாடு கொண்ட இளைஞர்கள் இப்படி ஒரு போராட்டத்தின் வழியாக, ஈழத் தமிழர்க்கு எதிராகப் போர் தொடுத்திருக்கிற இந்திய அரசைக் கண்டிப்பது ஏற்பாகவும் எழுச்சியாகவும் இருக்கும் என்று கருதினர்.

இதற்குள் கூட்டமைப்பு ஒரு நல்வடிவம் எய்தியது. பேரா. **சுப. வீரபாண்டியன்** என்னும் இளைஞரை இப்போராட்டத்திற்கு அமைப்பாளராக அமர்த்தி அவருக்கு உதவியாகப் பேரா. மு. மேத்தா, குக நாதன் போன்ற ஆர்வமுள்ளவர்களை அவர்க்குத் துணைவர்களாக்கிச் செயற்பாடுகளைத் தொடங்கியது.

போராட்டம் தொடக்கத்தில் 2-11-87 என்று முடிவாகியது. பாரிமுனையிலிருந்து மறைமலையடிகள் பாலம் வரை ஏறத்தாழ 16 அ. மா. (கி. மி) தொலைவில் மக்கள் ஒருவர் கையை ஒருவர் கோத்துக் கொண்டு நின்று முழக்கங்கள் இட வேண்டும் என்பது போராட்டத் திட்டம், இது தொடர்பான விளம்பரங்கள், அறிக்கைகள், சுவரொட்டிகள் ஏராளமாக அச்சிடப் பெற்றுப் பரப்பப்பெற்றன, ஒட்டப்பெற்றன. மக்கள் ஆர்வத்துடன் போராட்ட நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். நகர மக்களே ஓர் உந்து வேகம் கொண்டிருந்தனர் என்று சொல்லும் படி போராட்டம் சூடு பிடித்தது.

போராட்டத்தில் ஏறத்தாழப் பதினையாயிரம் மக்கள் ஈடுபாடு கொண்டால்தான் போராட்டம் முழு நிறைவு பெறும் என்று உய்த்துணர்ந்த கூட்டமைப்பினர், வேறு கட்சி அமைப்புகளையும் போராட்டத்தில் பங்கு கொள்ள அழைப்பதென முடிவெடுத்தனர்.

அதன்படி அ.தி.மு.க., தி.மு.க, காமராசு பேராயம், தி.க., சனதா, சகசீவன்ராம் பேராயம், அம்பேத்கர் கட்சி முதலியவற்றின் தலைவர்கள், பேச்சாளர்கள் பலரையும் கூட்டமைப்பின் முன்னணி அறிஞர்களைக் கொண்டு நேரில் அழைப்பு விடுத்தனர். அவர்களும் இசைந்தனர்.

போராட்டத்தின் இறுதி முடிவாக அ.தி.மு.க. வினருள், திருவாளர்கள் கா. காளிமுத்து, புலவர் புலமைப்பித்தன், வலம்புரி சான், அலடி அருணா ஆகியோரும்,

தி.மு.க. வில் உள்ள திருவாளர்கள் சாதிக் பாட்சா, நீல நாராயணன், ஆர்க்காடு வீராசாமி, என். வி. என். சோமு., டி.ஆர்.ஆர். பாலு, துரை முருகன், சா. கணேசன், இராம. அரங்கண்ணல் முதலியோர் உள்ளடங்கிய முன்னணியினரும்,

தி.க.வில் பொதுச் செயலாளர் கி. விரமணி, உள்ளடக்கிய முன்னணியினரும்,

கூட்டமைப்பைச் சார்ந்த பாவலரேறு பெருஞ்சித்திரனார், பேரா. சாலை. இளந்திரையனார், பேரா. சாலினி இளந்திரையனார், பெருங்கவிக்கோ. வா. மு. சேதுராமன், பேரா. சுப. வீரபாண்டியன், பாவலர். இன்குலாப், பாவலர். மு. மேத்தா, செல்வி அருள்மொழி, ஞானி, அக்னிபுத்திரன், பேரா, இ. மறைமலை, மூர்த்தி, வழக்கறிஞர் தென்னன் முதலியோரும்,

பேராசிரியர்கள் ந. சஞ்சீவி, நன்னன், பொற்கோ, இயக்குநர்கள் வி. செ. குகநாதன், செ. யோகநாதன், காரைக்குடி இராம. சுப்பையா ராசன் முதலியோரும்,

மற்றும் மாணவர் தலைவர்கள், ரவி, ஐசரி கணேசன், (பச்சையப்பன் கல்லூரி), இளங்கோ செல்வம், பிரதாப் குமார் (மாநிலக் கல்லூரி) சண்முகசுந்தரம், மோகனசுந்தரம், ரமேசு (நந்தனம் அரசு கலைக் கல்லூரி), சரவணன், மாரிமுத்து (தியாகராயர் கல்லூரி), திருமாவளவன், சக்திவேல் (சட்டக் கல்லூரி), சுரேசு, சுப்பிரமணி (எசு. ஐ. இ. வி. டி. கல்லூரி). அருளாளன் (குருநானக் கல்லூரி) முதலியவர்கள், தங்கள் கல்லூரி மாணவர்களுடனும்,

திரைப்படக் கலைஞர்கள் விசயகுமார், செய்கணேசு, சந்திரசேகர், எசு. எசு. சந்திரன், பாண்டியன், தர்மா, சார்லி, எசு. ஏ. கண்ணனன், காந்திமதி இசையமைப்பாளர், சந்திர போசு, இயக்குநர்கள் டி. இராசேந்தர், கடலூர் புருசோத்தமன் முதலியோரும் கலந்து கொள்வதென முடிவெடுக்கப் பட்டது.

இவ்வளவு முயற்சிகள் நடந்து முடிந்தும், 2-11-87-ஆம் நாள் அன்று நடைபெறவிருந்த மக்கள் தொடரிப்போராட்டம், பெருமழை, புயல் காரணமாக 6-11-87-க்கு ஒத்தி வைக்கப்பட்டது. இருப்பினும் போராட்ட ஒத்திவைப்பு அறிவிக்கப்படும் முன்னர், போராட்டத் தெருக்களில் பல விடங்களில், அன்று மாலை 4.30—5 மணியளவில் ஒரளவு மக்கள் மழையில் நனைந்து கொண்டு நின்றது குறிப்பிடத்தக்கது.

ஒத்திவைக்கப் பெற்ற போராட்டம் 6-11-87 மாலை 4 மணியிலிருந்து 5 மணி வரை, மழை, புயல் இருந்தாலும் தவறாமல் நடைபெறும் என்று திட்டவட்டமாக அறிக்கை, செய்தித்தாள் விளம்பரங்கள், சுவரொட்டிகள் வழியாக அறிவிக்கப் பெற்றது

Scanned with CamScanner

அதுபோலவே 6-11-87 வெள்ளி மாலை, 4 மணி முதலே மக்கள் ஆங்காங்கு, பாரிமுனையிலிருந்து, மீனம்பாக்கம் வரை வரிசை வரிசையாக வந்து போராட்டத்திற்கெனக் குழுமத் தொடங்கினர்.

திட்டமிட்ட படியும் ஒப்புக்கொண்ட படியும் அனைத்துக் கட்சியினரும், அவரவர்கள் வகுத்துக் கொண்டவாறு, மக்கள் தொடரியின் (மனிதச் சங்கிலியின்) கண்ணிகளாய் நின்று, இடையீடின்றி வரிசையை நிரப்பத் தொடங்கினர்.

பெரியோர்களும், நடுத்தர அகவையினரும், பெண்களும், இளைஞர்களும், சிறுவர்களுமாக, நீண்ட நெடிய மக்கள் தொடர், ஏறத்தாழ இரண்டு மணி நேரம், சென்னை, பாரிமுனையிலிருந்து, மறைமலையடிகள் பாலத்தையும் தாண்டி ஏறத்தாழ 10 கல்கள் (16 கி. மீ) தொலைவு, ஏறத்தாழ 15 ஆயிரம் போர், தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக, **இந்திய அரக்கர் படையே, யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறு** — என்று வானதிரக் குரல் கொடுத்தனர்.

இவ் வரலாற்றுச் சிறப்பு மிக்க போராட்டத்தில், ஒரே ஒரு நெகிழ்ச்சிச் செயல்தான் நிகழ்ந்தது என்பதை வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியுள்ளது.

போராட்டம் திட்டமிடப்படும் பொழுது, தமிழக முதலமைச்சர் திரு, மா. கோ. இராமச்சந்திரன் மருத்துவம் பார்க்க வேண்டும் என்ற காரணத்தோடு, அமெரிக்காவில் இருந்தார். அவர் இங்கில்லாத அசட்டுத் துணிவாக அ.தி.மு.க. வீரர்களாகத் தம்மைக் கருதிக் கொண்டிருப்பார் சிலர் போராட்டத்தில் கலந்து கொள்வதாக வாயுறுதி கொடுத்தனர்; விளம்பரமும் பெற்றனர்.

ஆனால், ஐயோ, அந்தோ, போராட்டம் நடைபெறுவதற்கு ஓரிரு நாள் முந்தி, அ. தி. மு.க. தலைவரும், தமிழக முதல்வரும் தமிழகம் திரும்பி வந்து விட்ட அச்சத்தாலோ, அல்லது அவர் வந்த பின் இட்ட கட்டளையாலோ, அவ்வீரர்கள், தங்கள் வாயுரையும் மறந்து, தமிழீழத்தில் கொல்லப்படும் போராளிகள் பொதுமக்கள் ஆகியோரின் அவலங்களையும் துறந்து, போராட்ட முழக்கத்தில் தங்கள் வீரக் குரலொலியைக் கலக்கத் தவறி விட்டனர்; தவிர்த்து விட்டனர். ஆம் போராட்டத்தன்று எங்கோ காணாமல் போய் விட்டனர். இந்தக் கோழைத்தனமான கறை அழிக்க முடியாத இழிவுக் குறியாக தமிழக வரலாற்றின் ஏடுகளில் பதிவாகி விட்டது அவலம்! அவலம்! பேரவலம்!

மற்றபடி, குறிப்பிட்ட நாளன்று, குறிப்பிட்ட நேரத்தில் மக்கள் தொடரி என்னும் 'மனிதச்சங்கிலி'ப் போராட்டம் மிக வெற்றியாக மிக மிக வெற்றியாக நடந்தேறியது.

போராட்டத்தில் அ.தி.மு.க. தவிர பிற கட்சிகள் அனைத்தும் முன்னர் குறிப்பிட்ட படி வீரமாக வெற்றி நடைபோட்டுக் கலந்து கொண்டன. தி.மு. கழகத்தில் கலைஞர், பேராசிரியர் தவிர பிற அனைத்து முன்னணியினரும் பங்கு கொண்டது நன்றியுடன் குறிக்கத் தக்கது.

அறிவாலயத்தின் முன்னர், தி.மு.க. வினருள் முன்னர் குறிப்பிட்டவர்களுடன், க. அறிவழகன், மா. வே. நாராயணசாமி, இரகுமான்கான், கோவை இராமநாதன், செ. கந்தப்பன், நெல்லிக்குப்பம் கிருட்டிணமூர்த்தி, பரிமளம், நெல்லை புகாரி, இரணியல் இரவி, கடலூர் து. புருடோத்தமன், காகா — இராதாகிருட்டிணன், செ. கண்ணப்பன், மைனர் மோசசு, இவர்களுடன், கலைஞரின் துணைவியார் திருவாட்டி இராசாத்தி அம்மையார், செல்வி கனிமொழி, பரிமளம் துணைவியார் சரோசா, அண்ணாவின் பெயர்த்திகள் இளவரசி, தமிழ்ச் செல்வி, ஆகியோரும் போராட்டத்தில் வந்து கலந்து கொண்டு கைகோத்துக் கொண்டு முழக்கமிட்டனர். போராட்டத்தினர் போட்ட முழக்கங்களுள்,

'கொல்லாதே கொல்லாதே, தமிழர்களைக் [கொல்லாதே'

'போரை நிறுத்து போரை நிறுத்து
இந்திய அரசே போரை நிறுத்து'

'உரிமை காப்போம் உரிமை காப்போம்
ஈழத்தமிழர் உரிமை காப்போம்'

'போராடுவோம் போராடுவோம்
தமிழர்க்காகப் போராடுவோம்'

'அமைதிப் படையா அரக்கர் படையா?'

'இந்திய இட்லர் இராசீவ் காந்தியே
இந்தியப் படையைத் திரும்பப் பெறு'

என்பன போன்றவை சில.

இந்தப் போராட்டம் மிக மிகச் சிறப்பாகவும் முழு வெற்றியுடனும் நடந்தது தமிழீழ உரிமைப் போராட்ட வரலாற்றில் ஒரு குறிப்பிடத் தக்க செயல்திறமுடையதாகும். இது பற்றிய செய்திகள் தமிழகத்தின் அனைத்துச் செய்தித் தாள்களிலும் பரபரப்புடன் வெளியிடப் பெற்றன. **தினமணி** தான் தன் பார்ப்பன இழிவு நோக்கத்துடன் சாவு மேளங் கொட்டியது.

'**தினகரன்**' இப் போராட்டம் பற்றிச் சிறப்பானதோர் ஆசிரியவுரையே எழுதியது, அதில், '**இப் போராட்டத்தை நடத்த முன்வந்தவர்கள், இதுவரை அரசியலில் ஒரு சிறு ஊதியத்தையும் நலத்தையும் பெற்றிராதவர்**'கள் என்றும், **மக்களுக்குக் கருத்துப் புரட்சியால் விழிப்புணர்வை ஊட்டுவதிலும், அவர்களுக்காற்றும்**

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

(11-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்மைத் தொண்டிலும் மகிழ்ச்சி கொள்ளுபவர்கள் என்றும், மனமாரப் பாராட்டிப் போராட்டத்தை வரவேற்று எழுதியிருந்தது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இந்தப் போராட்டம் பற்றியும் இதனை ஆதரித்தும் கலைஞர் அவர்கள் முன்னரே *முரசொலியில்* தம்பிக்குக் கடிதங்கள் அறிக்கைகள் எழுதியிருந்தது போலவே இதன் வெற்றி குறித்தும் பின்னர் முரசொலியில் நன்றியறிக்கை விட்டிருந்தார். அது மட்டுமன்று; இதைத் தொடர்ந்து, இப் போராட்டம் நடந்த ஐந்தாம் நாளில், தம் கழகச் சார்பில் மாவட்டத் தலைநகர் தோறும் ***'மனிதச் சங்கிலிப்'*** போராட்டம் நடத்தும் படி கட்டளையிட்டதே, இப் போராட்டம் எவ்வாறு தமிழகத் தலைவர்களையும் மக்களையும் ஈர்த்துள்ளது என்பதற்குத் தக்க சான்றாகும்.

எழுச்சியான மக்கள் போராட்டங்களைத் தமிழீழ உரிமைக்காக நடத்திவரும் ***'ஈழத்தமிழர் உரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்பு'*** சார்பில் இனி அடுத்த போராட்டம் என்ன என்பதை ஆவலுடன் எதிர்பார்த்திருப்போம்! அதுபோலும் போராட்டங்களால் தில்லியரசின் கொட்டத்தை அடக்குவோம்!

—நம் சிறப்புச் செய்தியாளர்.

செல்வின் - பால்ராசு தொண்டுள்ளம் வாழ்க!

செங்கழுநீர்ப்பட்டு என்ற செங்கற்பட்டில், தொண்டுணர்வின் இரட்டையர்களாக, செம்பொருட் செல்வர் திருவாளர்கள் **செல்வின், பால்ராசு** என்னும் இருவர் தமிழினத் தொண்டில் மேம்பட்ட கொள்கைப் பிடிப்போடு நம் உ.த.மு.க. ஆர்வலர்களாகத் இனத் தொண்டாற்றுவது நமக்குப் பேருவகையையும், பெரும் பெருமையும் உண்டாக்கி வருகிறது.

அன்னார் இருவரும், அண்மையில் நடந்த ***மக்கள் தொடரி*** என்னும் ***மனிதச் சங்கிலிப்*** போரட்டத்தின் பொழுது, நாம் வெளியிட்டிருந்த கோரிக்கைக்கு ஏற்ப, ***தமிழ் நிலம்*** இதழ் எண் 93 இன் முன்பக்கக் கட்டுரையைப் உருபா 500 செலவில் பத்தாயிரம் படிகள் அச்சிட்டுப் பொது மக்களுக்கு வழங்கினர்கள்.

அவர்களின் ஆர்வமும் அரிய தமிழினத் தொண்டும் நம்மை மெய்சிலிர்க்க வைத்தன. இவர்களின் எடுத்துக் காட்டான செயற்பாட்டை நம் கழகத்தில் உள்ள செல்வ உள்ளங்களும் பின்பற்றினால், விளைபயன் எத்துணையளவு மிகுந்து தோன்றும் என்பதை அன்பர்கள் எண்ணிப்பார்க்கவும்.

தொண்டுணர்வின் இரட்டையர்கள் செல்வின், பால்ராசு வாழ்க!

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 14

பல்வேறு இன மக்களை ஓரின மக்களாக மாற்ற முயல்வது இயற்கைக்கு மாறானது; எனவே அது என்றும் நடவாதது.

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண்- 95. TN/MS (C) 657

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5 . அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5